**கொச்சிக்கடை பாலத்தை மீள்நிர்மாணித்தல் செயற்திட்டம் - 2017**

-----------------------------------------------------------------------------------------------

கொச்சிக்கடை பாலத்தை மீள்நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆஸ்திரியாவின் றெய்பீஸன் பாங் இன்ரநஷனல் ஏஜீ இற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 சனவரி 13 ஆம் திகதிய கடன் உடன்படிக்கையின் கீழ் இச் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

-----------------------------------------------------------------------------------------------

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அப்போதைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. கட்டமைப்பு ரீதியாக பலவீனமானதாகவும் வாகன அசைவுகளிற்குப் பொருத்தமற்றதாகவும் மா-ஓயாவிற்கு மேலாக ஏற்கனவே கொச்சிக்கடையின் பேலியகொட - புத்தளம் வீதியில் உள்ள பால இல 38/3 இனை பதிலீடு செய்து பேலியகொட மற்றும் புத்தளத்தை இணைக்கும் நெடுஞ்சாலை உட்கட்டமைப்பை தொடர்ந்து பேணுவதற்கு கணிசமானளவு பங்களிப்பை வழங்குதல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,735.62 மில்லியனிற்குச் சமமான யூரோ 10.85 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 1,392 மில்லியனிற்குச் சமமான யூரோ 8.70 மில்லியன் ஆஸ்திரியாவின் றெய்பீஸன் பாங் இன்ரநஷனல் ஏஜீ ஆல் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 யூலை 24 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 சனவரி 24 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

-----------------------------------------------------------------------------------------------

மதிப்பாய்வு மற்றும் சோதனைகளின் நோக்கெல்லை மற்றும் பரப்பானது எனக்கு கிடைக்கப் பெற்ற வரையறுத்த ஊழியர்கள், ஏனைய வளங்கள் மற்றும் இருக்கும் நேரம் போன்றவற்றை வைத்து சாத்தியமான பரந்ததொரு கணக்காய்வை செயல்படுத்தலாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது. தொகைகளை ஆதாரப்படுத்தும் சான்றுகள் சோதனை அடிப்படையில் விசாரணை செய்யப்பட்டதனையும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விதத்தினையும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மீதான மதிப்பீடுகளையும் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போதான முகாமைத்துவத்தின் போதுமான மதிப்பீடுகளையும் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பித்தலை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அறிவுக்கெட்டிய வகையில் கணக்காய்வு நோக்கத்திற்காக போதியளவு தகவல்களையும் விளக்கங்களையும் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அமைப்பு மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டு பதிவுகள் மீதான செவ்வையினையும் அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளிற்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து உருவாகும் செம்மையாக்கல்களின் தாக்கங்களை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்காய்வின் போது பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், கடன் வழங்கும் முகவரால் வழங்கப்பட்ட மொத்த ஒதுக்கீட்டில் 35 சதவீதமானவை ஒரு கொடையாக காட்டப்படல் வேண்டும். இருப்பினும் பெறப்பட்ட கொடையை அடையாளப்படுத்தி தனிப்பட நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு செயற்றிட்டத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செய்து முடிக்கப்பட்ட வேலைப் பெறுமதி ரூபா 1.51 மில்லியன் 2017 திசெம்பர் 31 இல் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை இதன் விளைவாக நடைமுறை வேலை மற்றும் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்த பெறுமதிகள் குறித்த பெறுமதியினால் குறைத்து காட்டியது.

### 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

#### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2017 திசெம்பர் 31 வரையுமான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதி | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு | |
| | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியன் | ரூபா மில்லின் |
| றெய்பீஸன் பாங் | 8.70 | 1,392.00 | 1,360.00 | 3.92 | 627.73 | 6.31 | 1,007.41 |
| ஜீஓஎஸ்எல் | 2.15 | 343.62 | 40.00 | 0.13 | 20.45 | 0.87 | 134.45 |
| | 10.85 | 1,735.62 | 1,400.00 | 4.05 | 648.18 | 7.18 | 1,141.86 |

#### 3.2 பௌதீக செயல் செயன்முன்னேற்றம்

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், கோரப்படாத முறையில் தெரிவு செய்யப்பட்ட ஆஸ்திரியன் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட டேர்ன்கீ ஒப்பந்தத்தின் கீழ் 65 சதவீதமான பால நிர்மானிப்பு வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்திருந்தன. மீளாய்வாண்டின் இறுதியில் 60 சதவீதமான நிர்மான வேலைகள் மாத்திரமே அடைவதற்கு இலக்கிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், ஒப்பந்த உடன்படிக்கையின் பிரிவு (சீ) மற்றும் (இ) ன் கீழ் வழங்கப்பட்ட விபரங்கள் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

புதிய பாலமானது பழைய பாலத்திலிருந்து வேறுபட்ட இடத்தில் நிர்மானிக்க தீர்மானிக்கப்பட்டிருந்த பேதிலும் நிலமானது குறித்த நேக்கத்திற்கு பொருத்தமானது, பாலத்தின் வகை மற்றும் பாதைகளின் எண்ணிக்கை போன்றவற்றை தீர்மானிப்பதற்கும் உரிய சாத்தியவள கற்கை செய்திருக்கப்படவில்லை.

## 3.4 செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள்

செயற்திட்டமானது பால நிர்மானிப்பிற்காக 09 காணித்துண்டுகளை கொள்வனவு செய்திருந்தது இதற்காக 2017 திசெம்பர் 31 இல் இழப்பீடாக ரூபா 103.40 மில்லியனும் வட்டி ரூபா 11.90 மில்லியனும் செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும் குறித்த திகதி வரை காணித் துண்டுகளுக்கான உரிமையானது காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் மாற்றீடு செய்யப்பட்டிருக்கவில்லை.